தோட்டக்கலை துணை இயக்குநர் காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை: திரு.பொ.இம்மானுவேல். பி.எஸ்ஸி (தோ)**

செ.மு.ஆ.எண்: அ1 /1402/2019(4)

நாள்: -11-2019

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV ல் அடங்கிய பணிகள் நேரடித் தேர்வு – 2015-2016,2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு – தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு \ பணி நியமனம் செய்யப்பட்டது – திரு.ந.ராஜேஸ்வரன், இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை:

1) அரசு ஆணை எண்: 191 பொதுத்துறை நாள்: 01-02-1962
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 1012/PSD-G2/2019 நாள்: 20-02-2019 மற்றும் 27-02-2019
3) வேளாண்மை இயக்குநர்அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர்(பணி மேலாண்மை) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்: அறிபி5/ 139388 /2018 நாள்: 05-03-2019
4) தோட்டக்கலை இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை. சேப்பாக்கம், சென்னை, அவர்களின் செயல்முறை ஆணை எண்: அபபி2/ 4193/ 2019 நாள் 07-03-2019

-------

**ஆணை:**

பார்வை 2 ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின் 2015-2016,2016-2017 மற்றும் 2017-2018 ம் ஆண்டு முடிய தொகுதி 4 தேர்வில் தற்காலிக தெரிவு செய்யப்பட்ட திருவாளர்.ந.ராஜேஸ்வரன், இளநிலை உதவியாளர் அவர்கள் பார்வை 3 மற்றும் 4 ல் காணும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து இவ்வலுவலகத்தில் தற்காலிக அடிப்படையில் 15-03-2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 1 ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு திரு.ந.ராஜேஸ்வரன், இளநிலை உதவியாளர் அவர்களின் பணி 15-03-2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இவரது பணி 15-03-2019 முற்பகல் முதல்கொண்டு வரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர் தனது தகுதிகாண் பருவத்தினை இரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளுக்குள் முடித்திட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

இவ்விவரம் இவரது பணிப்பதிவேடு தொகுதி 1 பக்கம் எண்: 11 ல் பதியப்பட்டுள்ளது என சான்று அளிக்கப்படுகிறது.

14-11-19

தோட்டக்கலை துணை இயக்குநர்,
காஞ்சிபுரம்.

பெறுதல்,
திரு.ந.ராஜேஸ்வரன்,
இளநிலை உதவியாளர் இவ்வலுவலகம்,
நகல்:
1)ஆ1 பிரிவு
2) இருப்புக்கோப்புக்கு

ஒ.வா
14.11.2019

நகல்: தோட்டக்கலை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: வேளாண்மை இணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.